# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● டிசம்பர் 03 2022 Weekly E-paper ● December 03, 2022

பா.ஜ.க.வின் நோக்கம்

## தி.மு.க.வை எதிர்ப்பதும், அ.தி.மு.க.வை அழிப்பதும்!

சுப.வீரபாண்டியன்



## ஆன்லைன் ரம்மியை ஆளுநர் ஆதரிக்கிறாரா!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

## அண்ணாமலையின் குளறுபடி!

தலையங்கம்

## உண்மையை உரக்கச் சொன்ன கலைஞன்!

மா.உதயகுமார்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● டிசம்பர் 03 2022 Weekly E-paper ● December 03, 2022


## பா.ஜ.க.வின் நோக்கம்

# தி.மு.க.வை எதிர்ப்பதும், அ.தி.மு.க.வை அழிப்பதும்!

**சுப.வீரபாண்டியன்**

திமுகவை எதிர்ப்பது, அதிமுகவை அழிப்பது என இரண்டு வழிகளில் தங்கள் வேலையைத் தமிழ்நாட்டில் முடுக்கிவிட்டிருக்கிறது பாரதிய ஜனதா கட்சி!

அதிமுகவை அழிப்பது என்னும் நோக்கில் அவர்கள் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். 2016 டிசம்பர் 5ஆம் நாள் முன்னாள் முதலமைச்சர், அதிமுகவின் அன்றைய பொதுச் செயலாளர் ஜெயலலிதா மறைந்தார். ஆறு ஆண்டுகள்தான் நிறைவடைந்து இருக்கின்றன. அதற்குள் கட்சி ஆறு துண்டுகளாக உடைந்து கிடக்கிறது.




**“ திமுக அல்லது அதிமுக தோளில் ஏறி அமர்ந்து, நான்கு நான்கு இடங்களைச் சட்டமன்றத்தில் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். தனியாகத் தங்கள் காலில் அவர்களால் நிற்க முடியுமா என்று கேட்டால், கால் இருப்பவனால்தான் அது முடியும். பாஜகவால் ஒருநாளும் தமிழ்நாட்டில் தனித்து நிற்க முடியாது.”**


அறிஞர் அண்ணா அவர்கள் இறந்து அரை நூற்றாண்டு வரையிலும் கூட, கட்சிக்கு எந்தப் பாதிப்பும் இல்லாமல் பார்த்துக் கொண்டவர் தலைவர் கலைஞர்! அவர் இறந்து நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, இன்று முன்பு இருந்ததைவிடக் கட்சி வளர்ந்து நிற்கிறது. அதற்குக் காரணமாக இருப்பவர் தளபதி மு.க. ஸ்டாலின்!

ஆனால் அதிமுகவைக் காப்பாற்ற அங்கு யாரும் இல்லை. அதை அழிப்பதற்கு பாஜக பக்கத்திலேயே இருக்கிறது!

தங்களின் அடுத்த ஆசையையும் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். திமுக அரசைக் கலைத்து விட முடியுமா என்று கூடப் பார்க்கிறார்கள். அந்த நோக்கத்தில்தான், கடந்த நவம்பர் 29ஆம் தேதி பாஜகவின் மாநிலத் தலைவர் அண்ணாமலை, ஆளுநரைச் சந்தித்து, நான்கு மாதங்களுக்கு முன்பு பிரதமர் தமிழ்நாட்டிற்கு வந்திருந்த போது பாதுகாப்பு சரியாக வழங்கப்படவில்லை என்று கூறி இருக்கிறார்! நான்கு மாதங்கள் அவரும் அவர் கட்சியினரும் வெளிநாடு சென்று இருப்பார்கள் போல் இருக்கிறது! இப்போதுதான் அதைக் கண்டுபிடித்து இருக்கிறார் அண்ணாமலை. அந்தப் புகார் மனுவைப் பெற்றுக் கொண்ட ஆளுநர், தலைமைச் செயலாளர் அல்லது தலைமைக் காவல்துறை அதிகாரியிடம் அது குறித்துக் கேட்டிருப்பதாகச் சில செய்திகள் கசிகின்றன!

ஆண்டுக் கணக்கில், தமிழ்நாடு அரசின் சட்டமன்றத்தில் இயற்றப்பட்ட தீர்மானங்களைக் கிடப்பில் போட்டு வைத்திருக்கும் தமிழக ஆளுநர், அண்ணாமலை கொடுத்த புகாருக்கு மூன்றே நாள்களில் நடவடிக்கை எடுக்கத் தொடங்கி இருப்பதாக வரும் செய்திகள் அவர்களின் உள்நோக்கத்தை நமக்குப் புலப்படுத்துகின்றன

சட்டம், ஒழுங்கு தமிழ்நாட்டில் கெட்டுவிட்டது என்னும் பொய்ச் செய்தியைத் திரும்பத் திரும்பச் சொல்வதன் மூலமும், பொய்யான பல குற்றச்சாட்டுகளை அடுக்கிக் கொண்டே போவதன் மூலமும், ஆட்சியைக் கலைப்பதற்கு அவர்கள் முயற்சி செய்யக் கூடும்!

ஒரு நாடு எப்படி ஜனநாயகமற்றுப் போய்க் கொண்டிருக்கிறது என்பதற்குத்தான் இதுவெல்லாம் சாட்சியாக இருக்கிறது! அண்ணாமலையின் நடவடிக்கைகளும், அதற்கு ஆர். என். ரவி துணை போகும் விதமும் மக்களிடையே இவர்களுக்கு எதிர்க் கருத்தைத்தான் உருவாக்கும்.

திமுக அல்லது அதிமுக தோளில் ஏறி அமர்ந்து, நான்கு நான்கு இடங்களைச் சட்டமன்றத்தில் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். தனியாகத் தங்கள் காலில் அவர்களால் நிற்க முடியுமா என்று கேட்டால், கால் இருப்பவனால்தான் அது முடியும். பாஜகவால் ஒருநாளும் தமிழ்நாட்டில் தனித்து நிற்க முடியாது.

எனவே அடுத்தவனை அழித்தும், நடக்கின்ற நல்ல ஆட்சியைக் கலைத்தும், தாங்கள் பதவிக்கு வந்து விட வேண்டும் என்று கருதும் பாஜகவிற்கு மக்கள்தான் சரியான பாடத்தைப் புகட்ட வேண்டும்!! ●

# ஆன்லைன் ரம்மியை ஆளுநர் ஆதரிக்கிறாரா!

## வழக்கறிஞர் இராம.வைரமுத்து

ஆன்லைன் ரம்மி உள்ளிட்ட சூதாட்டத்தில் பணத்தை இழந்தவர்கள் கடனாளியாகி, மன உளைச்சல் காரணமாக இருபதுக்கும் மேற்பட்டவர்கள் தற்கொலை செய்து கொண்டனர். இதனால், அரசியல் கட்சிகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும், ஆன்லைன் ரம்மி உள்ளிட்ட பணம் பறிக்கும் சூதாட்ட விளையாட்டுகளைத் தடை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.




இதையடுத்து, 26.09.2022 அன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஆன்லைன் சூதாட்டத்திற்குத் தடை விதிக்கும் அவசரச் சட்டம் இயற்ற ஒப்புதல் அளிக்கப்பட்டு 01.10.2022 அன்று அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்திற்கு ஆளுநர் உடனடியாக ஒப்புதல் அளித்ததால் 03.10.2022 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டது.

அந்த அவசரச் சட்டத்திற்கு மாற்றாக நிரந்தர சட்ட மசோதாவை சட்டத்துறை அமைச்சர் ரகுபதி சட்டப்பேரவையில் 19.10.2022 அன்று தாக்கல் செய்தார்.

சட்ட மசோதாவிற்கு ஆறு வார காலத்திற்குள் கவர்னர் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்பதால் ஆன்லைன் ரம்மி தடை சட்ட மசோதாவிற்கு ஒப்புதல் அளிப்பதற்கான காலவரையறை 27 ஆம் தேதியுடன் நிறைவடைய இருந்த நிலையில், இது குறித்து "உள்துறைச் செயலாளரும், சட்டத்துறைச் செயலாளரும், நானும் ஆளுநரை சந்திக்க நேரம் கேட்டிருக்கிறோம். இது வரை அனுமதி வழங்கப்படவில்லை" என்று சட்டத்துறை அமைச்சர் ரகுபதி 24.11.2022 அன்று வெளிப்படையாக ஊடகங்களில் தெரிவித்தார். அந்த அழுத்தம் காரணமாக ஆளுநர் மசோதாவில் விளக்கம் கேட்டுக் கடிதம் அனுப்பினார். அதற்குத் தமிழ்நாடு அரசு முறைப்படி பதில் அளித்தப் பின்னரும் ஆளுநர் ஒப்புதல் தராததால் ஆன்லைன் ரம்மி சட்ட மசோதா காலாவதி ஆகி விட்டது.

**போகிற இடமெல்லாம் சனாதன தர்மத்தைத் தூக்கிப் பிடிக்கிற ஆளுநர் மகாபாரத்தில் வருவது போல் அனைவரும் சூதாட வேண்டும், அப்போதுதான் சனாதன தர்மத்தை வலுப்படுத்த முடியும் என்று எண்ணுகிறார் போலும்.**

ஆளுநரின் இந்த நடவடிக்கை அவர் ஆன்லைன் ரம்மியை ஆதரிக்கிறாரோ என்ற ஐயத்தை மக்களுக்கு ஏற்படுத்துகிறது. அவசரச் சட்டத்திற்கு ஒப்புதல் அளித்து விட்டு, சட்ட மசோதாவிற்கு ஒப்புதல் அளிக்காமல் தேவையற்ற விளக்கங்களைக் கேட்டு காலம் தாழ்த்திச் சட்ட மசோதாவைக் காலாவதியாக்கி இருப்பது மக்களாட்சி மாண்பைக் குலைக்கும் செயலாகும்.

ஆன்லைன் ரம்மி தடைச் சட்ட மசோதா போகிற போக்கில் அவசர கதியில் கொண்டு வரப்பட்டதல்ல. ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் சந்துரு தலைமையில் ஆணையம் அமைக்கப்பட்டு, அனைத்துத் தரப்பினரின் கருத்துகளைக் கேட்டறிந்து அதைப் பரிசீலித்து பரிந்துரைக்கப்பட்ட அம்சங்களை உள்ளடக்கியதே இந்தச் சட்ட மசோதா. இதை ஆளுநர் கவனத்தில் கொள்ளாமல் காலவதியாக்கி இருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

ஆன்லைன் ரம்மிக்கு 28% வரி விதிக்க இருப்பதாக ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் கூறி இருந்ததை நாம் இதனுடன் தொடர்புப் படுத்த வேண்டி உள்ளது. மக்கள் இதனால் படும் அவதியை கருத்தில் கொள்ளாமல் ஒன்றிய அரசு இதை வைத்து பொருள் ஈட்ட நினைக்கிறது. அதற்குத் துணை போகத்தான் ஆளுநர் இம்முடிவை எடுத்துள்ளதாகத் தெரிகிறது.

போகிற இடமெல்லாம் சனாதன தர்மத்தைத் தூக்கிப் பிடிக்கிற ஆளுநர் மகாபாரத்தில் வருவது போல் அனைவரும் சூதாட வேண்டும், அப்போதுதான் சனாதன தர்மத்தை வலுப்படுத்த முடியும் என்று எண்ணுகிறார் போலும்.

"அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"

என்ற திருவள்ளுவரின் வாக்குக்கேற்ப குடிமக்களின் கண்ணீருக்கு ஆளுநர் பதில் சொல்ல வேண்டியது காலத்தின் கட்டாயம்!

*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !*

# கருஞ்சட்டைத் தமிழர்

## அண்ணாமலையின் குளறுபடி!

குறையைச் சுட்டிக் காட்டுவது என்பது வேறு, இது வரவேற்கத்தக்கது. குறையைப் போல இட்டுக்கட்டிச் சொல்வது என்பது வேறு, இதனை அரைவேக்காடு என்பார்கள்.

பிரதமர் மோடியுடன் கொள்கை அடிப்படையில் முரண்பட்டு இருந்தாலும், அவர் பிரதமர் என்பதை நாம் மறக்கவில்லை.

பிரதமர் தமிழ்நாடு செஸ் ஒலிம்பியாட் போட்டியின் போது தமிழகம் வந்தார். அப்போது அவருக்குத் தமிழக அரசு கொடுத்த பாதுகாப்பில் குளறுபடி இருந்ததாகத் தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை சொல்கிறார். என்ன குளறுபடி? நேரு விளையாட்டு அரங்கில் மெட்டல் டிடெக்டர் கருவி வேலை செய்யவில்லை என்கிறார்.

இதற்குக் காவல்துறைத் தலைவர் சைலேந்திரபாபு, பிரதமர் நரேந்திர மோடி தமிழ்நாடு வருகையின்போது எந்தவிதமான பாதுகாப்புக் குளறுபடியும் ஏற்படவில்லை என்றும், நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் சரியான முறையில் பாதுகாப்பு அளிக்கப்பட்டதாகவும், தமிழகத்தில் காவல்துறைக்கு வழங்கும் உபகரணங்கள் தரமானதாக உள்ளதாகவும், நவீன தொழில்நுட்பத்துடன் அதிக எண்ணிக்கையில் பாதுகாப்பு உபகரணங்கள் இருப்பதாகவும், மற்ற மாநிலங்கள் தமிழ்நாடு காவல்துறையிடம் உபகரணங்கள் கேட்டு வாங்கும் அளவுக்குத் தரமாக உள்ளதாகவும் விளக்கம் அளித்தார்.

பிரதமரின் பாதுபாப்பு என்பது ஒன்றிய அரசின் பாதுகாப்புக் குழுவின் கீழ் இருக்கிறது. அதைத் தாண்டி மாநில அரசின் காவல் கூட நுழைய முடியாது என்று தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ்.இளங்கோவன் கூறுகிறார்.

பொறுப்பு வாய்ந்த காவல்துறைத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரும் தந்துள்ள இந்த விளக்கங்களுடன், தமிழ்நாடு அரசும் பிரதமரின் பாதுகாப்பு விசயத்தில் மிகக் கவனமாகச் செயல்பட்டது என்பதை நாடே அறியும்.

முன்னாள் காவல்துறை அதிகாரி அண்ணாமலைக்கு இது கூடத் தெரியாதா?

அண்ணாமலை அரசியல் செய்ய வேண்டாம் என்று சொல்லவில்லை.

போலி, பித்தலாட்ட அரசியல் செய்யாமல் இருப்பது நல்லது.

## கோவை மாவீரர் நாள்!



கோவை மாவட்டம் வீரபாண்டியில் 26-11-2022 அன்று 'சாதி ஒழிப்பு மாவீரர் நாள்' வீரவணக்கப் பொதுக்கூட்ட நிகழ்வு நடைபெற்றது. மாவட்ட அமைப்பாளர் கல்பனா தலைமை ஏற்பில், செயற்குழு உறுப்பினர் வீரபாண்டிபாபு அனைவரையும் வரவேற்றார். பேரவைப் பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் சிறப்புரையாற்ற, துணைப் பொதுச் செயலாளர்கள் ஆ.சிங்கராயர், சிற்பி செல்வராசு, அமைப்புச் செயலாளர் காசு. நகராசன், தி.மு.க மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி, நகரச் செயலாளர் அ.அறிவரசு, பேரூராட்சித் தலைவர் வீ.பத்மாவதி ஆகியோர் கருத்துரையாற்றினர். மாவட்டப் பொறுப்பாளர்கள் தம்புராசு, வழக்கறிஞர் சிலம்பரசன், கேசவன், காளப்பட்டி ஜெ.பி, ஆவை கோபிநாத், செந்தில், வீரபாண்டி விஜய், வசந்த், சரத் ஆகியோர் முன்னிலை வகிக்க, கூட்ட முடிவில் திராவிட நட்புக் கழகப் பொறுப்பாளர் விஜயராணி நன்றி தெரிவித்தார்

## சென்னை மாவட்டக் கூட்டம்



திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சென்னை மாவட்ட ஆலோசனைக் கூட்டம், பேரவைத் தலைமை அலுவலகத்தில் 27-11-2022 அன்று நடைபெற்றது. கூட்டத்தில் தலைமை நிலையச் செயலாளர் எட்வின் உள்பட தோழர்கள் கார்த்தி, மதிவாணன், லோக பாலன், தீபன், நன்முகில், புலவர் தி.க.சு, இசைமதி, விவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்: எழில். இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com, www.karunchattaibooks.com
மின் அஞ்சல்: karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408

# உண்மையை உரக்கச் சொன்ன கலைஞன்!

மா.உதயகுமார்

இந்தியாவில் கலை, இலக்கியம், இசை போன்ற துறைகளில் பார்ப்பனர்கள் தங்களுக்கு வல்லுனர் பிம்பங்களை வலிந்து உருவாக்கிக் கொள்ளுவார்கள். அவர்களே ஒருவருக்கொருவர் தங்களைப் புகழ்ந்து பாராட்டிக் கொள்வர். அவர்களுக்குள்ளேயே வாய்ப்புகளை வழங்கிக் கொள்வர். இவர்களுடைய ஆதிக்கத்தை மீறி இத்துறைகளுள் ஒருவர் வளரமுடியாது என்பதால், அவர்களைப் புகழ்ந்து பார்ப்பனர் அல்லாத சிலரும் பேசுவதை நாம் பார்க்கிறோம். அதையும் மீறிப் பார்ப்பனர் அல்லாத சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சிறந்த படைப்புகளை உருவாக்கிப் புகழ் பெறும் போது, பார்ப்பனர்கள் அவர்களை மௌனமாகக் கடந்து செல்வதையோ அல்லது பார்ப்பனர் அல்லாத அக்கலைஞர்கள் பார்ப்பனியத்திற்கு அடிபணிந்து விடுவதையோ நாம் பார்க்கிறோம்.

பார்ப்பனர்களின் இந்தப் போலி பிம்பமும், போலி தேசப்பற்று உணர்ச்சியும் ஒன்று சேர்த்து உருவாக்கப்பட்ட ஒரு திரைப்படம்தான் “தி காஷ்மீர் பைல்ஸ்” என்பது.

இத்திரைப்படத்தை இந்தியாவில் ஒன்றிய, மாநில அரசுகளின் ஆதரவோடு, மூளை முடுக்கு எங்கும் பரப்பினார்கள். இஸ்லாமியர்களுக்கு எதிரான வெறுப்புப் பிரச்சாரத்தை முன்னெடுத்தார்கள். இதனை ஜனநாயகவாதிகளும் முற்போக்காளர்களும், தொடர்ந்து வெளிப்படுத்திக் கண்டித்து வந்தனர். இந்த நிலையில் கோவாவில் நடைபெற்ற 53ஆவது சர்வதேசத் திரைப்பட விழாவின் நிறைவுநாளில் பேசிய நடுவர் குழுவின் தலைவர் நடவ் லபிட் ‘propaganda’ என்றும் ‘a vulgar film’ என்றும் இத்திரைப்படத்தைப் பற்றி குறிப்பிட்டுப் பேசியது உலக அரங்கில் இந்தியாவிற்குத் தலைகுனிவை ஏற்படுத்தி இருக்கிறது.

சர்வதேச அளவில் சில ஆவணப் படங்களும், திரைப்படங்களும் ஒரு பக்க நியாயங்களை மட்டுமே முன்வைத்து, பிரச்சாரங்களை முன்னெடுத்து இருக்கின்றன. நாடு, மொழி, இனம், மதம் போன்ற அடையாளங்களைக் கடந்த கலைஞர்களின் கண்டனங்களை




அப்படங்கள் பெற்றிருக்கின்றன. ஆனால் அண்மையில் வெளியான “தி காஷ்மீர் பைல்ஸ்” என்னும் திரைப்படம் போல் பொய்யான, வன்மம் நிறைந்த திரைப்படத்தை நாம் எங்கும் காண முடியாது. பார்ப்பனியத்தால், இந்தியாவிற்கே அவமானம் ஏற்பட்டிருக்கிறது.

இந்தியா-இஸ்ரேல் உறவு, பாலஸ்தீன மக்களின் விடுதலை, இவற்றில் இருக்கக்கூடிய சர்வதேச அரசியல் போன்றவற்றால் நடவ் லபிட்டுக்கு சில நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் மனித நேயத்தைப் போற்றும் கலைஞனாக உண்மையை உரக்கச் சொல்லி இருக்கிறார் லபிட்.

அவர் இஸ்ரேல் நாளிதழ் ஒன்றிற்கு அளித்த பேட்டியில், இதே போன்ற ஒரு திரைப்படம் இஸ்ரேலில் இருந்து ஒளிபரப்பப்படும் போது, வெளிநாட்டு நடுவர் உண்மையை உரக்கச் சொல்வதை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்பேன் என்றும், இது தனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பிற்கான கடமை என்றும் தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவில் இருக்கும் கலைத்துறை என்பது பார்ப்பன ஆதிக்கத்தால் சீரழிந்து கொண்டிருக்கிறது. இங்கு லபீட் போன்ற கலைஞர்கள் தங்கள் கடமையை உணர்ந்து உண்மையை உரக்கச் சொல்வது என்பது அரிதிலும் அரிது, ஒரு சிலரைத் தவிர.

எதற்கும் தயங்காமல், உண்மையைச் சொன்ன மதம், மொழி, நாடு கடந்த அந்தக் கலைஞனுக்கு நம்முடைய நன்றி! ●

## “திராவிடமா ? ஆரியமா?” விளக்கப் பொதுக் கூட்டம்





தமிழ்நாடு அரசின் பகுத்தறிவுத் திராவிட மாடல் ஆட்சிக்கு எதிராகச் சனாதன ஆரியச் சக்தியாகச் செயல்படும் ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக சென்னை, கிண்டி - சின்னமலையில் 30-11-2022 அன்று திராவிட இயக்கத் தமிழர் பேரவை நடத்திய “திராவிடமா ? ஆரியமா?” விளக்கப் பொதுக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன், திராவிடர் கழகப் பிரச்சாரச் செயலாளர், வழக்கறிஞர் அருள்மொழி ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். உடன் பேரவைத் தோழர்கள் ஆ.சிங்கராயர், சிற்பி செல்வராசு, காசு.நாகராசன், ‘பெல்’ ராஜன், செல்வின், மு.மாறன், இரா.உமா, எட்வின், மகாலட்சுமி, முத்தையா குமரன், கார்த்திக், இளமாறன், அம்பத்தூர் ராஜு, சூரியா உள்ளிட்டோர்.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian